49

# வேலன் வாசகம்

49/278

## 2



OFFICE OF THE REGISTRAR OF ...
7 APR 1958
MA...

TB
031(வ)
N58
146575

அ... இந்தியப் பதிப்பகம்.

# வேலன் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

(1957 டிசெம்பர் 25-ல் வெளியிடப்பட்ட பாடத்
திட்டத்தின்படி இயற்றப்பட்டது.)

Editor
Srimathi V. T. Lakshmi, M.A., L.T.,

Author
Vidwan K. Natesa Mudaliar,
Tamil Pandit, Fort High School,
BANGALORE.

அகில இந்தியப் பதிப்பகம்
வேலூர். : : பெங்களூர்.

பதிப்புரிமை] 1958 [விலை ரூ. 0-44

முதற் பதிப்பு 1958

TB
031(2)
N58

அகில இந்தியப் பதிப்பகம்,
வேலூர். — பெங்களூர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008.
146515

Printed at the Rayan Press, Madras-1.

# தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

—கவிஞர் இரவீந்திரநாத தாகூர்.

# முகவுரை

இவ்வாசகவரிசையில் இது இரண்டாவது புத்தகம். இதில் உள்ள படங்களையும் பாடங்களையும் வாய்மொழிப் பயிற்சிக்கு ஒருவாறு உபயோகித்துக் கொள்ளலாம். எனினும், உபாத்தியாயர்களுக்கென இயற்றப்பட்டுள்ள கைப்புத்தகம் அப் பயிற்சிக்குப் பெரிதும் உபயோக மாகும்.

இவ்வாசகத்தில் 500 சொற்களுக்கு வசதி செய்யப் பட்டுள்ளது. அச்சொற்கள் பாட ஆரம்பத்தில் இருப் பதைக் காட்டிலும் இறுதியில் இருப்பதே உசித மெனக் கருதி அவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளன. சொற்களைப் பிழை யின்றிப் படிக்கவும் எழுதவும் குழந்தைகள் பயில வேண்டு மென்பதே இவ்வாசகத்தின் நோக்கமாகும்.

ஒவ்வொரு பாடத்தையும் பார்த்தெழுதச் செய்தும், சொல்லி எழுதச் செய்தும், ஆசிரியர் தினமும் பயிற்சி யளிக்கவேண்டும். கற்பலகையிலும், நோட் புத்தகத்தி லும் இரட்டை வரிகளில் எழுதப் பழக்குதல் அவசியம். எழுத்துக்களை நன்றாக எழுதச் செய்து, பின் வேகமாக எழுதுவதில் ஊக்கப்படுத்துதல் நலம். நன்றாக உச்ச ரித்து உரக்க வாசிக்கும்படி கவனித்தல் வேண்டும்.

பதிப்பாசிரியர் தற்சமயம் Chief Inspector (of certified Schools and Vigilance Service, Madras) ஆக இருந்தபோதிலும், இப்புத்தகம் அவ்வுத்தியோக முறையில் பதிப்பிக்கப்பட்ட தல்ல.

19-2-58 The Editor

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நான் | .... | 7 |
| 2. | எங்கள் வீடு | .... | 9 |
| 3. | ஆடு மயிலே | ... | 11 |
| 4. | எங்கள் குடும்பம் | ... | 12 |
| 5. | ஒற்றுமை | ... | 15 |
| 6. | பாப்பா பாட்டு I | ... | 17 |
| 7. | எங்கள் தோட்டம் | ... | 18 |
| 8. | பேராசையுள்ள நாய் | ... | 20 |
| 9. | வெண்ணிலா | ... | 23 |
| 10. | எங்கள் தாயார் | ... | 24 |
| 11. | எங்கள் தகப்பனர் | ... | 27 |
| 12. | பாப்பா பாட்டு II | ... | 30 |
| 13. | ஊமையைப் பேசுவித்த சிறுமி | ... | 31 |
| 14. | எங்கள் பள்ளிக்கூடம் | ... | 34 |
| 15. | பூனை | ... | 37 |
| 16. | விநாயக சதுர்த்தி | ... | 38 |
| 17. | ஆமையும் முயலும் | ... | 41 |
| 18. | தாவரம் | ... | 44 |
| 19. | கோழி | ... | 47 |
| 20. | முத்து | ... | 48 |

21. தென்னந்தோப்புத் திருடன் ... 51
22. புதிய கத்தி ... 54
23. மர நாய் ... 57
24. ஔவையார் ... 58
25. தீபாவளி ... 61
26. பசுவும் கன்றும் ... 64
27. பள்ளி வேலே ... 65
28. எலிகள் மகாநாடு ... 69
29. போகுது பார் ... 72
30. கந்தன் ... 73

செய்யுள் பாடம்

1. உலக நீதி ... 77
2. கொன்றை வேந்தன் ... 79

---



# 1. நான்

நான் ஒரு பெண்.

என் பெயர் கமலா.

எனக்கு வயது ஆறு.

நான் தினமும் பள்ளிக்குச் சென்று வருகிறேன்.

நான் இவ்வருஷம் இரண்டாவது வகுப்பில் படிக்கிறேன்.

சென்ற ஆண்டு நான் முதல் வகுப்பில் படித்தேன்.

அதோ பார்! அவன் எனது அண்ணன்.

அவன் பெயர் சங்கர்.

அவனுக்கு வயது எட்டு.

அவனும் தினம் பள்ளிக்குச் சென்று படித்து வருகிறான்.

அவன் நான்காவது வகுப்பில் படிக்கிறான்.

தினமும் மாலையில் நாங்கள் எல்லாப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவோம்.

| | | |
|---|---|---|
| வயது | வருஷம் | விளையாடுவோம் |
| முதல் | தினமும் | இரண்டாவது |
| ஆண்டு | மாலையில் | நான்காவது |
| வகுப்பு | சேர்ந்து | படிக்கிறேன். |

பயிற்சி :

விடை சொல் :—

1. உன் பெயர் என்ன ?
2. உன் வீட்டில் உள்ளவர்களின் பெயர்களை எழுது.




## 2. எங்கள் வீடு

1. இது எங்கள் வீடு. இது இவ்வாண்டு புதிதாகக் கட்டப்பட்டது. நல்ல காற்றும் வெளிச்சமும் இருக்கும்படி இது கட்டப் பட்டுள்ளது. இவ்வீட்டில் பல சன்னல்களும் கதவுகளும் உள்ளன.

2. எங்கள் வீட்டில் பல அறைகள் உண்டு. ஒன்று பூசை அறை. இன்னொன்று படிப்பு அறை. இன்னொன்று சாப்பாட்டுக் கூடம். மற்றொன்று சமையல் அறை. இவை தவிர, குளிக்கும் அறை ஒன்றும் நட மாடும் இடமும் இதில் உள்ளன.

வீட்டின் பின்புறத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அதிலிருந்து எங்களுக்குத் தேவையான தண்ணீரை நாங்கள் எடுத்துக் கொள்ளுகிறோம்.

கிணற்றுக் கருகில் உள்ள வெளியிடத்தில் சில காய்கறிச் செடிகளை நாங்கள் பயிரிட்டுக் கொள்ளுகிறோம்.

| | | |
|---|---|---|
| அறை | காய்கறிகள் | சாமான்கள் |
| பூசை | எடுத்து | தேவையான |
| கூடம் | புதிதாக | இன்னொன்று |
| தவிர | பின்புறம் | மற்றொன்று |
| அருகில் | வெளிச்சம் | வெளியிடம் |
| சன்னல்கள் | சாப்பாடு | பயிரிட்டு |

பயிற்சி :

**விடை சொல் :—**

1. உன் வீட்டில் எத்தனை அறைகள் இருக்கின்றன ?
2. அவை யாவை ?



# 3. ஆடுமயிலே!

ஆடுமயிலே! குதித் தாடு மயிலே!
அழகிய தோகைவிரித் தாடு மயிலே!

பாடு குயிலே! இசை பாடு குயிலே!
பழைய தமிழிசை பாடு குயிலே!

போடு முகிலே! தாளம் போடு முகிலே!
பொருந்த இடிமுழக்கம் போடு முகிலே!

கூடு கிளியே! வந்து கூடு கிளியே!
கொஞ்சி மழலைபேசிக் கூடு கிளியே!



## 4. எங்கள் குடும்பம்

1. எங்கள் குடும்பத்தில் நான், என் அண்ணன், அக்காள், தம்பி, தங்கை, தாயார், தகப்பனார், தாத்தா, பாட்டி ஆகிய நாங்கள் ஒன்பதுபேர் இருக்கிறோம். சில சமயங்களில் விருந்தினர் யாராவது வருவதும் உண்டு.

2, எங்களுள் தாத்தாவும் பாட்டியும் வயதானவர்கள். அவர்கள் எங்கள் தந்தையின் பெற்றோர்கள். எங்களிடம் அவர்கள் அன்பாக இருப்பார்கள். எங்கள் தாய்

தந்தையர் எங்களுக்கு வேண்டுவன அளித்து, எங்களைப் பள்ளிக்கு அனுப்புவார்கள். நாங்கள்



தாத்தா பாட்டி முதலிய எல்லோரிடத்திலும் மரியாதையாக இருப்போம்.

3. தாத்தா எங்களுக்குப் பாடம் கற்பிப்பார்; சில வேளைகளில் கதைகளும் சொல்லுவார். பாட்டி எங்களுக்குத் தின்பண்டம் செய்து கொடுப்பாள்; மாலை வேளைகளில் நல்ல கதைகளும் சொல்லுவாள்; ஒவ்வொரு சமயம் இனிமையான குரலில் சில பாட்டுக்களும் பாடுவாள்.

4. மாலை வேளைகளில் எங்கள் தாத்தாவுடன் நாங்கள் வெளியே உலாவப் போவோம். அப்போது நாங்கள் பல குழந்தைகளுடன் கூடி விளையாடுவோம்.

| | | |
|---|---|---|
| தாத்தா | விருந்தினர் | யாராவது |
| பாட்டி | பெற்றோர்கள் | அன்பாக |
| வெளியே | குழந்தைகளுடன் | அளித்து |
| உலாவ | வேண்டுவன | மரியாதை |
| கூடி | இனிமையான | கற்பிப்பார் |
| குரல் | தின்பண்டம் | சமயம் |
| குடும்பம் | வேளைகளில் | வயதானவர்கள் |

## பயிற்சி :

I. விடை சொல் :—

1. உங்கள் வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்கள் யார் யார் ?
2. நீ யாரிடத்தில் மரியாதையாக இருப்பாய் ?
3. உன் தாய் தந்தையர் உனக்கு என்னென்ன செய்வார்கள் ?

II. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்.

1. பாட்டி —— ——செய்து கொடுப்பாள்.
2. தாத்தா எங்களுக்குப் பாடம்—— ——.



## 5. ஒற்றுமை

1. உன் கைவிரல்களை நீட்டிப் பார். ஒவ்வொரு கையிலும் எத்தனை விரல்கள் இருக்கின்றன ? எல்லா விரல்களும் ஒரே அளவாக இருக்கின்றனவா ? இல்லையே.

2. மிகவும் குட்டையான விரல் கட்டை விரல். அதை அடுத்துள்ள விரலை ஆள்காட்டி விரல் என்கிறோம். சாலையில் வழி காண்பிக்கும் கைகாட்டிகளில், ஆள்காட்டிவிரல் வழியைச் சுட்டிக் காட்டிக்கொண் டிருக்கிறது. அதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

3. ஆள் காட்டி விரலை அடுத்துள்ள விரல், ஐந்து விரல்களுக்கும் நடுவில் இருப்

பதால், நடுவிரல் என்று சொல்லப்படுகிறது. எல்லா விரல்களிலும் இதுவே நீளமானது.

4. இதற்கு அடுத்துள்ள விரல் மோதிர விரல் எனப்படும். இது ஏறக்குறைய ஆள் காட்டி விரல் அவ்வளவு நீளம் இருக்கும்.

5. மிகுந்திருப்பது சுண்டு விரல். இது மிகச் சிறியதாயிருக்கும். விரல்கள் நீளத்திலும் பருமனிலும் வித்தியாசப்படுகின்றன. ஆன போதிலும், வேலைகளில் எல்லா விரல்களும் சேர்ந்தே உபயோகப்படுகின்றன. அது போலவே ஒவ்வொரு குடும்பத்திலும் பெரியோர்சிறியோர் எல்லோரும் சேர்ந்தே உழைக்க வேண்டும். ஒற்றுமையாக உழைத்தால் சுகமாய் வாழலாம்.

| | | |
|---|---|---|
| சாலையில் | நடு | எத்தனை |
| மிகவும் | சுண்டு | ஏறக்குறைய |
| அடுத்து | கைகாட்டி | ஒற்றுமை |
| அளவாக | ஆள்காட்டி | பருமன் |
| குட்டையான | மோதிரம் | வித்தியாசம் |
| கட்டை | ஒவ்வொரு | வாழ்வு |

## பயிற்சி

I. விடை சொல் :—

1. ஆள்காட்டிவிரலுக்கு ஏன் அப்பெயர் வந்தது ?
2. மிக நீளமான விரல் எது ?
3. மோதிர விரல் எது ?

II. ஒவ்வொரு விரலின் பெயரையும் எழுது.



## 6. பாப்பா பாட்டு-I

ஓடி விளையாடு பாப்பா !—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா !—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !

சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா !
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா !

கொத்தித் திரியுமந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா !
எத்தித் திருடும் அந்தக் காக்கை—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா !

—பாரதியார்.



# 7. எங்கள் தோட்டம்

எங்கள் வீடு தெற்கு நோக்கி யுள்ளது. அவ்வீட்டைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் சுற்றுச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது. வீட்டுக்கும் சுற்றுச் சுவர்க்கும் இடையே காலி யான திறந்த இடங்கள் உள்ளன. வீட்டின் தென்புறத்து வாயிலில் தென்னை, வேம்பு போன்ற நிழல் தரும் மரங்கள் உள்ளன.

வீட்டின் கிழக்குப் புறத்தில் எலுமிச்சை, நாரத்தை, சாத்துக்குடி போன்ற பழந்தரும் மரங்கள் உள்ளன. மேற்குப் புறத்தில் மல் லிகை, முல்லை, ரோஜா, கனகாம்பரம் போன்ற பூச்செடிகள் இருக்கின்றன. பின்புறத்தில்

அதாவது: வடக்குப் புறத்தில் சில காய்கறிச் செடிகள் காலத்திற் கேற்றவாறு பயிரிடப் படுகின்றன.

சில மாதங்களில், அவரை, பீர்க்கு, புடல், பாகல் முதலிய காய்கறிக் கொடிகளும், வேறு சில மாதங்களில் கீரை வகைகளும், கத்தரி, வெண்டை, கொத்தவரை முதலிய காய்கறிச் செடிகளும் பயிரிடப்படுகின்றன.

மற்றும் சில விடங்களில், வாழை, மா, பலா முதலிய மரங்களும் உள்ளன. உரிய காலங்களில் இவை பழங்களை மிகுதியாக அளிக்கும். இவை தவிர, பல பூந்தொட்டி களில் பலவித "குரோட்டன்ஸ்" செடி களும் வளர்க்கப்படுகின்றன. இவை பார்ப் பதற்கு அழகாகக் காணப்படும். இவைகளை யெல்லாம் எருவிட்டும், களை யெடுத்தும், தண்ணீர் ஊற்றியும், கவனித்துவர ஒரு தோட்டக்காரனை நாங்கள் அமர்த்தியிருக் கிறோம்.

| | | |
|---|---|---|
| பக்கம் | காலியான | உரிய |
| இடையே | ஏற்றவாறு | எரு |
| திறந்த | மற்றும் | களை |
| உள்ளன | கவனித்து | அமர்த்தி |

பயிற்சி:

1. உன் வீட்டைச் சுற்றி வளரும் செடி கொடி கள் யாவை?



## 8. பேராசையுள்ள நாய்

1. ஒரு நாய் ஒரு நாள் மிக்க பசியால் வாடி வருந்திற்று. அது அங்கும் இங்கும் ஓடி அலைந்து களைப் படைந்தது. கடைசியாக ஒரு ரொட்டிக் கடையின் முன்பாக உட்கார்ந்திருந்தது. அதற்கு அங்கு ஒரு ரொட்டித் துண்டு கிடைத்தது.

2. நாய் அத்துண்டை வாயில் கௌவிக் கொண்டு போயிற்று. போகும் வழியில் நீர் நிறைந்த ஒரு வாய்க்கால் ஓடிக்கொண்டிருந்தது. அந்த வாய்க்காலைக் கடக்க ஒரு மரப் பலகை இரு கரைகளுக்கும் இடையே பாலமாகப் போடப்பட்டிருந்தது.

3. பலகையின் மேல் நாய் நடந்து சென்றபொழுது, அது கீழே தண்ணீரைப்

பார்த்தது; தன் உருவமே தண்ணீரில் தென் பட்டதால், அங்கும் ஒரு நாய் ரொட்டித் துண்டைக் கௌவிக்கொண்டிருப்பதாக அது எண்ணிற்று. அந்த நாயுடன் சண்டையிட்டு அத்துண்டையும் பிடுங்கிக்கொள்ள எண்ணங் கொண்டது.



4. உடனே அது வாயைத் திறந்து கொண்டே தண்ணீரில் குதித்தது. அப்போது அதன் வாயில் இருந்த ரொட்டித் துண்டு தண்ணீரில் விழுந்து விட்டது. நாய் பேராசைப்பட்டுப் பெருநஷ்டம் அடைந்தது. பின்பு அதைக் குறித்து வருந்திக் கொண்டே அது கரை ஏறிச் சென்றது.

| | | |
|---|---|---|
| ரொட்டி | பெருநஷ்டம் | களைப்பு |
| கடை | எண்ணம் | கடைசியாக |
| பேராசை | சண்டை | பாலம் |
| கௌவி | பிடுங்க | குதித்தது |
| உருவம் | தென்பட்டது | துண்டு |
| வாய்க்கால் | கண்டது | கடக்க |

## பயிற்சி

I. விடை சொல்:—

1. நாய் ஏன் வாடி வருந்திற்று?
2. அதற்குக் கிடைத்தது யாது?
3. வாய்க்காலைக் கடக்க என்ன ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது?
4. நாய் எப்படி ரொட்டித் துண்டை இழந்தது?



# 9. வெண்ணிலா

விண்மேல் உலவுகின்ற வெண்ணிலாவே!-உனை
வேண்டுமென்றே யார் படைத்தார் ?—
வெண்ணிலாவே !
பால்போல் வெளுத்திருக்கும் வெண்ணிலாவே
—இந்தப்
பாருக்கொரு விளக்கான வெண்ணிலாவே ! 1

வளர்ந்து வளர்ந்து தேயும் வெண்ணிலாவே !
—இந்த
வாடிக்கை வந்ததேனே வெண்ணிலாவே !
பந்துபோல் திரண்டுருண்ட வெண்ணிலாவே !
—இன்று
பாலர் விளையாட வாராய் வெண்ணிலாவே ! 2




## 10. எங்கள் தாயார்

1. நேற்று ஞாயிற்றுக் கிழமை என் தம்பி மாதவனுக்குப் பிறந்த நாள். அவனை என் தாயார் நீராட்டி அவனுக்குப் புதிய ஆடைகள் அணிவித்தார். அவனையும் கூட்டிக் கொண்டு நாங்கள் கோயிலுக்குப் போய்க் கடவுளை வணங்கி வந்தோம். பகலில் சில நண்பர்களுடனும் சுற்றத்தாருடனும் நல் விருந்து உண்டோம்.

2. பிற்பகலில் எங்கள் தாயார் எங்களுக்குச் சில தின்பண்டங்களைப் பகிர்ந்து கொடுத்தார். அப்போது என் தம்பியும் தங்கையும் தங்க

ளுக்குப் பெரிய பங்குத்தான் வேண்டும் என்றும், சிறியது வேண்டாம் என்றும் அழுது ஆரவாரம் செய்தனர்.

3. அதைக் கண்ட எங்கள் பாட்டி அத் தின்பண்டங்களைத் தான் வாங்கி, எங்கள் எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்து வைத்து, "யாருக்கு எது வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாம்" என்றாள். அன்றியும், முதலில் என் தங்கை, பிறகு என் தம்பி, அதன் பிறகு நான், எனக்குப் பிறகு என் அண்ணன் என்ற வரிசையில் எடுத்துக் கொள்ளும்படி கூறினாள். நாங்களும் அப்படியே எடுத்துக்கொண் டோம். சண்டை கூச்சல் ஒன்றுமில்லாமல் அவை பகிர்ந்து கொடுக்கப்பட்டு விட்டன. எங்களுக்கும் அது வெகு திருப்தியாய் இருந் தது.

4. அது முதல் எங்களுக்குத் தின்பண் டம் கொடுக்கும்பொழு தெல்லாம் எங்கள் தாயார் அவ்வாறே அதனைச் சமபாகங்களாகப் பகிர்ந்து கொடுப்பது வழக்கமாகி விட்டது. நாங்களும் சண்டை சச்சரவுகள் இல்லாமல் அதனைப் பெற்றுக்கொண்டு மகிழ்வோம்.

| | | |
|---|---|---|
| பிறந்த | நண்பர் | பங்கு |
| நீராட்டி | சுற்றத்தார் | அழுது |
| அணிவித்தார் | பகிர்ந்து | வரிசை |

TB
03(2)
N58

| | | |
|---|---|---|
| வணங்கி | ஆரவாரம் | கூறினாள் |
| சமமாக | அன்றியும் | கூச்சல் |
| திருப்தி | சச்சரவு | வழக்கம் |

## பயிற்சி :

விடை சொல் :—

1. மாதவன் புத்தாடை அணியக் காரணம் என்ன ?
2. அவன் தங்கையும் தம்பியும் ஏன் ஆரவாரம் செய்தனர் ?
3. பாட்டி தின்பண்டங்களை எப்படிப் பகிர்ந்து கொடுத்தாள் ?
4. குழந்தைகள் எந்த வரிசையில் தங்கள் பாகங்களை எடுத்துக்கொண்டனர் ?




# 11. எங்கள் தகப்பனார்

1. எங்கள் தகப்பனார் தினமும் வேலைக்குப் புறப்படும்பொழுதெல்லாம் தம்து தாயாரிடம் விடைபெற்றுச் செல்வார். பாட்டியும் அவரை ஆசி கூறி அனுப்புவார்.

2. ஒரு நாள் பாட்டியார் ஏதோ வேலையாக வீட்டின் பின்புறத்தில் இருந்தார். அதனால் அவரிடம் சொல்லிக் கொள்ளாமலே அன்று எங்கள் தகப்பனார் வேலைக்குச் சென்றுவிட்டார்.

3. அன்று மாலையில் அவர் வீட்டுக்குத் திரும்பி வந்தபொழுது சற்று நொண்டியவாறு

நடந்து வந்தார். அவர் முகமும் சற்று வாட்ட முற்று இருந்தது. வீட்டினுள் நுழைந்ததும், அவர் தமது தாயாரிடம் சென்று வணங்கி, "அம்மா, நான் இன்று காலை உங்களிடம் விடை பெற்றுக் கொள்ளாமலும், உங்கள் ஆசி பெருமலும் வேலைக்குச் சென்றேன். அதன் பயனுக, காலில் ஒரு கல் பட்டுக் காய முண்டாயிற்று; அன்றியும் என் ஆபீஸ் மேலதிகாரி என் மீது கடிந்து பேசினுர். எனக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. இவைகள் யாவும் இன்று ஏன் ஏற்பட்டன வென்று யோசித்துப் பார்த்தேன். உங்களிடம் விடைபெருமல் சென்றதால்தான் என்பதை உணர்ந்தேன்" என்று மிகவும் தாழ்மையாகத் தெரிவித்தார்.

அதைக் கேட்ட பாட்டியாரும் மிக்க வருத்த மடைந்தார். அது முதல் எங்கள் தகப்பனுர் தமது தாயாரிடம் விடைபெருமல் ஒரு நாளும் தம் வேலைக்குச் சென்றதே கிடையாது.

இவற்றையெல்லாம் அறிந்த நாங்களும் தினமும் பள்ளிக்குப் போகும்பொழு தெல்லாம் எங்கள் தாயாரிடமும் பாட்டியாரிடமும் விடைபெற்றுக்கொண்டே பள்ளிக்குச் செல்வது வழக்கம்.

| | | |
|---|---|---|
| **வேலைக்கு** | சற்று | காயம் |
| **விடைபெற்று** | முகம் | அதிகாரி |
| ஆசி கூறி | நுழைந்ததும் | கடிந்து |
| தாழ்மை | உணர்ந்தேன் | மிகுந்த |
| அறிந்து | கிடையாது | யோசித்து |
| பயன் | யாவும் | நொண்டியவாறு |

## பயிற்சி :

**விடை சொல் :—**

1. தகப்பனார் வேலைக்குப் புறப்படும்பொழுது என்ன செய்வார் ?
2. ஒரு நாள் அவர் ஏன் தம் தாயாரிடம் விடை பெற்றுச் செல்லவில்லை ?
3. அதனால் என்ன பயன் ஏற்பட்டது ?

# 12. பாப்பா பாட்டு-II

பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்து வரும் நாய்தான்—அது
மனிதருக்குத் தோழனடி பாப்பா!

வண்டி யிழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!

—பாரதியார்.



# 13. ஊமையைப் பேசுவித்த சிறுமி

ஓர் ஊரில் ஒரு பிச்சைக்காரன் இருந்தான். அவன் நாள்தோறும் ஊமைபோல நடித்துப் பிச்சை கேட்பது வழக்கம். ஒரு நாள் அவன் ஒரு வீட்டின் முன்னுல் பிச்சை கேட்பவன் போல நின்றுகொண்டிருந்தான்.

அவ்வீட்டிலிருந்த ஒரு சிறுமி அவனைப் பார்த்து, "பிச்சை இல்லை, போ!" என்ருள். அவன் போகாமல் அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

**சிறுமி:** "நீ ஏன் பிச்சை எடுக்கிருய்? நீ ஊமையா?" என்ருள். பிச்சைக்காரன், "ஆம்"

என்பதற்கு அடையாளமாகத் தன் தலையை அசைத்தான்.

**சிறுமி:** "நீ எவ்வளவு காலமாய் இப்படி ஊமையாய் இருக்கிறாய்"?

**பிச்சைக்காரன்:** "பிறந்தது முதலாகவே நான் ஊமையாக இருந்து வருகிறேன்."

**சிறுமி:** "இதோ பேசுகிறாயே. நீ ஏதாவது வேலை செய்து பிழைக்கலாமே! உன் உடலில் நோயொன்றும் காணப்படவில்லையே! நன்றாக இருக்கிறாயே! கூன், குருடு, செவிடு, முடம், முதலிய உடற் குற்றங்கள் இருப்பவன் அல்லவோ பிச்சை எடுத்துப் பிழைக்க வேண்டும்? உனக்கு யார் பிச்சை போடுவார்கள்? ஊமையைப் போல் பாசாங்கு செய்துகொண்டு இனி ஊரை ஏமாற்றாதே. எங்கேனும் தொழில் செய்து கௌரவமாகப் பிழை" என்றாள்.

பிச்சைக்காரன் வெட்கித் தலை குனிந்து, அப்பால் சென்றது மல்லாமல், அவ்வூரையும் விட்டகன்று, வேறு ஊருக்குப் போய் அங்கே கூலி வேலை செய்து பிழைத்து வந்தான்.

| | | |
|---|---|---|
| ஊமை | நாள்தோறும் | பிழைக்க |
| பிச்சை | அடையாளம் | செவிடு |
| நடித்து | அசைத்தான் | குற்றம் |
| அகன்று | ஏமாற்றி | வெட்கி |
| அல்லாமல் | அப்பால் | தொழில் |
| குனிந்து | கௌரவம் | பாசாங்கு |

## பயிற்சி :

**விடை சொல் :—**

1. சிறுமி பிச்சைக்காரனைப் பார்த்து என்ன சொன்னாள் ?
2. அவள் அவனை எப்படிப் பேசவைத்தாள் ?
3. எப்படிப்பட்டவர்களுக்கு ஜனங்கள் பிச்சை போடுவார்கள் ?
4. பிச்சைக்காரன் கடைசியில் யாது செய்தான் ?




## 14. எங்கள் பள்ளிக்கூடம்

அதோ தெரிவது எங்கள் பள்ளிக்கூடம். அது ஒரு புதிய கட்டிடம். அதில் அனேக பெரிய அறைகள் உள்ளன. ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு தனி அறை உண்டு. வகுப்பு அறைகளில் நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் உண்டு. எங்கள் அறைகளை நாங்களே சுத்தம் செய்வோம்.

2. கட்டிடத்தைச் சுற்றிலும் திறந்த வெளி உண்டு. அந்த வெளியிடத்தில் ஒரு பெரிய விளையாடு மிடம் உண்டு. மற்றொரு புறத்தில் பாடசாலைத் தோட்டம் இருக்கிறது. தோட்டத்தைச் சுற்றி வேலி போடப்பட்

டிருக்கிறது. தோட்டத்தின் நடுவில் ஒரு கிணறு இருக்கிறது. கிணற்றுக் கருகில் ஒரு தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அதில் தினமும் தோட்டக்காரர் கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து நிரப்புவார். நாங்கள் சிறு வாளிகளில் தண்ணீரை மொண்டு செடிகளுக்கு ஊற்றுவோம்.

3. விளையாடுமிடம் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும். எங்கள் தலைமை ஆசிரியர் எங்கள் விளையாட்டில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். அவர் அடிக்கடி போட்டிப் பந்தயங்கள் நடத்துவார்.

4. எங்கள் பாடசாலையில் ஒரு காட்சிச் சாலை, ஒரு புத்தகசாலை, ஒரு கைத்தொழிற் கூடம், ஆகியவை உண்டு. வகுப்புக்களுக்குத் தகுந்தபடி எங்களுக்குக் களிமண் வேலை, காகித வேலை, அட்டை வேலை, பூ வேலை, பாய் நெய்தல், நூல் நூற்றல், கயிறு திரித்தல், நாடா நெய்தல், ஓலை முடைதல், துணி நெய்தல் முதலிய கைவேலைகள் எங்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வாளி | ஊற்று | கைத்தொழில் |
| சுற்றிலும் | மொண்டு | ஆசிரியர் |
| புறத்தில் | இறைத்து | நெய்தல் |
| நிரப்பு | செலுத்தி | நூற்றல் |
| சுத்தமாக | கவனம் | திரித்தல் |
| அடிக்கடி | போட்டி | முடைதல் |
| பந்தயம் | ஆகிய | தெரிவது |

## பயிற்சி :

விடை சொல் :—

1. உங்கள் வகுப்பு அறைகளை யார் சுத்தம் செய்வது வழக்கம் ?
2. தலைமை உபாத்தியாயர் சிறுவர்களின் விளையாட்டில் எப்படிக் கவனம் செலுத்துகிறார் ?
3. பாடசாலையில் கற்பிக்கப்படும் கைவேலைகள் யாவை ?



## 15. பூனை

மியாம் மியாம் பூனை,
மேலே உள்ள பூனை,
பாயும் பெரிய பூனை,
பக்கத்தில் வா பூனை.

பாலுனக்குத் தருவேன்
சோறுனக்குத் தருவேன்
காசுனக்குத் தருவேன்
காரியம் செய் பூனை.




# 16. விநாயக சதுர்த்தி

1. நேற்று எங்கள் வீட்டில் விநாயக சதுர்த்திப் பண்டிகை கொண்டாடினோம். விநாயக சதுர்த்தி என்பது விநாயகர் பிறந்த தினமாகும். விநாயகரைப் பிள்ளையார் என்றும் சொல்வது உண்டு.

2. நேற்றுக் காலையில் எழுந்தவுடன் என் தாய் வீட்டைச் சுத்தம் செய்து கோல மிட்டாள். நாங்கள், மாவிலைத் தோரணம் கட்டினோம். என் தகப்பனாரும் என் அண்ணனும் கடைக்குச் சென்று, விநாயகர் பொம்மையும், காகிதக் குடையும், காய்கறி களும் மற்றும் பழம் முதலிய பல சாமான்

களும் வாங்கிவந்தார்கள். நானும் வேறு சில பையன்களும் வெளியே சென்று, நாவல் பழமும், புளியம் பிஞ்சுகளும், எருக்கம் பூவும் கொண்டு வந்தோம்.

3. என் தாயாரும் பாட்டியாரும் நீராடி நல்ல உணவு சமைத்தனர்; பல தின்பண்டங்களும் செய்தனர், அவற்றுள் விநாயகருக்கு மிகவும் பிடித்தவை கொழுக்கட்டையும் இட்டிலியு மாகும். பிறகு விநாயகருக்குப் பூசை நடந்தது. பூசை யானவுடன் பருப்பு, வடை, கொழுக்கட்டை, இட்டிலி, பாயசம், பச்சடி, காய்கறிகள் முதலியவற்றையும், நாவல் பழம், தேங்காய், வாழைப் பழம், ஒட்டுப் புளியங் காய்களையும் விநாயகருக்குப் படைத்தோம். எருக்கம் பூவை மாலையாகத் தொடுத்து அவருக்கு அணிவித்தோம். நாங்களும் விநாயகர் அகவல் முதலிய தோத்திரங்களையும் பாடி விநாயகரை வணங்கினோம்.

4. பிறகு, நாங்கள் சில நண்பர்களுடன் உட்கார்ந்து வயிறாரப் போசனம் அருந்தினோம். உண்டபின் வேடிக்கையாகச் சில நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

5. மாலையில் மறுபடியும் விநாயகருக்குப் பூசை செய்து, இரவு உணவு உண்டோம். மறுநாள் காலையிலும் பூசை செய்து, தேங்காய் பழம் முதலிய பண்டங்களைப் படைத்

தோம். பின்பு, விநாயகர் பதுமையைத் தண்ணீ ரில் சேர்த்து விட்டோம்.

6. விநாயகருக்குப் பூசை செய்வதாலும், அவரைத் தொழுவதாலும், நாம் எண்ணிய காரியம் யாதொரு தடையுமின்றி முடியும் என்று எங்கள் தாத்தா, பாட்டி முதலிய பெரியோர்கள் எங்களுக்குச் சொன்னார்கள்.

| | | |
|---|---|---|
| விநாயகர் | பதுமை | கொண்டாடு |
| நேற்று | பண்டிகை | கொழுக்கட்டை |
| பிஞ்சு | பிடித்தவை | காரியம் |
| அகவல் | எழுந்து | தொழுவது |
| வயிரா | தொடுத்து | தடை |
| வேடிக்கை | தோத்திரம் | பாயசம் |

## பயிற்சி :

I. விடை சொல் :—

1. விநாயகருக்குப் பிரியமான தின்பண்டங்களும் பழங்களும் எவை ?
2. விநாயக சதுர்த்திக்குச் சேகரிக்க வேண்டிய பொருள்கள் யாவை?
3. விநாயகருக்குப் பூசை செய்வதால் என்ன பயன் ?

II. சில பண்டிகைகளின் பெயர்களை எழுது.



# 17. ஆமையும் முயலும்

1. ஒரு காட்டில் ஒரு முயல் வசித்து வந்தது. ஒரு நாள் அது ஓர் ஆமையைச் சந்தித்தது. "ஓய், மந்த நடையாரே! சௌக்கியமா?" என்று அதைப் பரிகாசமாகக் கேட்டது.

2. ஆமை, "அப்பா, ! நான் மந்த நடையன்தான்; ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல் நீங்கள் என்னுடன் ஒரு ஓட்டப் பந்தயத்திற்கு வருகிறீர்களா? வந்தால் நான்தான் வெற்றி பெறுவேன். அயலாரைப் பழிப்பதில் பயனில்லை; செருக்கு மொழிகள் பேசாதீர்!" என்றது. அதற்கு முயல், "ஆகா! இப்போதே வருகிறேன்; என் சாமர்த்தியத்தைக் காட்டுகிறேன்" என்றது.

3. இரண்டும் உடனே ஓரிடத்திலிருந்து புறப்படுவதாகவும், சற்றுத் தூரத்திற்கு அப்பா லிருக்கும் ஒரு பெரிய ஆலமரத்தைப் போய் அடையவேண்டு மென்றும் ஓர் ஏற்பாடு செய்து கொண்டு ஓடப் புறப்பட்டன. முயல் தாவித் தாவிப் பாய்ந்தோட, ஆமை மெதுவாக ஊர்ந்து சென்றது.

4- சற்றுத் தூரம் ஓடியபிறகு, முயல் பின்னால் திரும்பிப் பார்த்தது. ஆமை காணப் படவில்லை. "அது வர இன்னும் வெகு நேரம் ஆகும்; அதற்குள் இங்குச் சற்று இளைப் பாறிவிட்டுப் பிறகு போகலாம்" என்று நினைத்து முயல் அங்கு ஒரு புதரின் அடியில் படுத்துக்கொண்டது.

5. ஆமை மெதுவாக நகர்ந்து நகர்ந்து சென்று அந்த ஆலமரத்தை அடைந்து விட்டது. இளைப்பாறலாம் என்று படுத்த முயல் அயர்ந்து தூங்கிவிட்டது. விழித்தவுடன், எழுந்து ஆலமரத்தை நோக்கிப் பார்க்க, முயல் அங்கு ஆமை இருப்பதைக் கண்டது. தான் பந்தயத்தில் தோற்றுவிட்டதை யறிந்த முயல் வெட்கிக் காட்டினுள் ஓடிவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| ஊர்ந்து | செருக்கு | மந்த | சந்தித்தது |
| மொழி | நோக்கி | வெற்றி | பரிகாசம் |
| அயர்ந்து | புதர் | தோற்று | சௌக்கியம் |

| | | | |
|---|---|---|---|
| பழிப்பது | நகர்ந்து | தூங்கி | அயலார் |
| நினைத்து | தாவித்தாவி | விழித்து | இளைப்பாறி |
| புறப்படு | பாய்ந்து | எழுந்து | சாமர்த்தியம் |

## பயிற்சி :

**விடை சொல் :—**

1. முயல் ஆமையை என்னவென்று அழைத்தது? ஏன் ?
2. ஆமை சொன்ன பதில் என்ன ?
3. முயல் எப்படி ஓடிற்று ?
4. ஆமை எப்படிச் சென்றது ?
5. பந்தயத்தில் எது தோற்றது ? ஏன் ?
6. இப்பாடத்திலிருந்து உங்களுக்கு என்ன தெரிகிறது ?




# 18. தாவரம்

1. மரம் செடி கொடிகளுக்குத் தாவரம் என்று பெயர். தாவரங்கள் நமக்கு மிக உபயோகமுள்ளவை. மேலே படத்தில் காட்டப்பட்டுள்ள காய்கறிகளை நீ பார்த்திருக்கிறாயா?

1.புடலங்காய், 2.வாழைக்காய், 3.பரங்கிக்காய், 4. பலாக்காய், 5. வெண்டைக்காய், 6. கத்தரிக்காய், 7. பீர்க்கங்காய், 8. மிளகாய், 9. பாகற்காய்.

2. இவைகளில் சில, மரங்களிலிருந்து கிடைக்கக் கூடியவை. சில, செடிகளிலிருந்து கிடைக்கக் கூடியவை. வேறு சில, கொடிகளிலிருந்து கிடைப்பவை.

3. நாம் இக்காய்கறிகளைச் சமைத்துச் சாப்பிடுகிறோம். இவை நமது உடல் நலத்துக்கு அவசியமானவை. தோட்டங்களில் நாம் இவைகளைப் பயிரிடுகிறோம். சில காலங்களில் மாத்திரம் சில காய்கறிகள் நன்றாகப் பயிராகும். அப்பருவத்தில் தான் அவைகளைப் பயிரிடவேண்டும். "**பருவத்தே பயிர் செய்**" என்பது நம் நாட்டுப் பழமொழி.

4. வெள்ளரி கக்கரி போன்றவைகளைப் பச்சையாகவே சாப்பிடலாம். மாங்காய், எலுமிச்சங்காய், நாரத்தங்காய், நெல்லிக்காய் முதலியன ஊறுகாய்க்கு உதவும். மாங்காய், வாழைக்காய், பலாக்காய் போன்றவைகளைப் பழுத்தபின் சாப்பிடுகிறோம். இப்பழங்களின் ரசத்தை எடுத்துப் பக்குவப்படுத்தி, சீசாக்களில் அடைத்து வைக்கிறார்கள். அது வெகு நாட்களுக்குக் கெடாமல் இருக்கும்.

| | | |
|---|---|---|
| பருவம் | தாவரம் | அவசியமான |
| செடி கொடிகள் | பழ ரசம் | பழமொழி |
| உபயோகம் | பெயராத | பக்குவம் |
| ஊறுகாய் | மாத்திரம் | அடைத்து |

## பயிற்சி :

I. விடை சொல் :—

1. தாவரம் என்று எவற்றிற்குப் பெயர் ?

2. காய்கறிகள் நமக்கு எவ்வெவ்விதங்களில் உப யோகப்படுகின்றன ?

II. மரங்கள், செடிகள், கொடிகள் இவைகளிலிருந்து கிடைக்கும் காய்கறிகளைத் தனித் தனியாக எழுது :

III. இருபது காய்களின் பெயர்களை *அகராதி வரிசையாய் எழுது.

---

* அகராதி வரிசை இன்னதென்பதை ஆசிரியர் குழந்தைகட்கு விளக்கல்வேண்டும்.



## 19. கோழி

(சேவல் கோழி)

1. கோழீ ! கோழீ ! வா வா ;
 கொக்கோ கோ என்று வா ;
கோழீ ! ஓடி வா வா !
 கொண்டைப் பூவைக் காட்டு வா.

2. குத்திச் சண்டை செய்யவோ ?
 குப்பை கிண்டி மேயவோ ?
கத்தி போல்உன் கால்விரல்
 கடவுள் தந்து விட்டனர் !

3. காலை கூவி எங்களைக்
 கட்டில் விட் டெழுப்புவாய் ;
வேலை செய்ய ஏவுவாய் ;
 வெற்றி கொண்ட கோழியே !

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை




## 20. முத்து

1. முத்து என்ற ஒரு சிறுவன் இரண்டாம் வகுப்பில் படித்து வந்தான். ஒரு நாள் அவன் அவ்வகுப்பில் படித்து வந்த சோமு என்ற இன்னொரு பையனுடைய பலகையை எடுத்தான். அது தவறித் தரையில் விழுந்து உடைந்து விட்டது. சோமு பலகை உடைந்ததற்காக விம்மி விம்மி அழுதான். அதைக் கண்டு உபாத்தியாயர் இருவரையும் விசாரித்தார். முத்துவைப் பார்த்து அவர், "நீ நாளைக்கு வேறு பலகை வாங்கி வந்து சோமுவினிடம் கொடுத்து விடு" என்றார். முத்துவும் ஒப்புக் கொண்டான்.

2. ஆனால், முத்து அதைப் பற்றி வீட்டில் எவரிடமும் சொல்லவில்லை. சோமு அடிக்கடி முத்துவினிடம் வந்து பலகையைப் பற்றிக் கேட்பான். முத்து அவனை மெதுவாக வெளியே அழைத்துச் சென்று ஏதாவது சமாதானம் சொல்லி அனுப்பிவிடுவான்.

3. ஒரு நாள் சோமுவின் அண்ணன் அவனுடன் வந்து, முத்துவின் தகப்பனாரிடம் நடந்ததைச் சொன்னான். அதைக் கேட்ட தகப்பனார் முத்துவை அழைத்து விசாரித்தார். முத்துவும் உண்மையை ஒப்புக்கொண்டான். உடனே தகப்பனார், வீட்டிலிருந்த வேறொரு பலகையை எடுத்துச் சோமுவினிடம் கொடுத்து அனுப்பினார்.

4. பிறகு முத்துவை அழைத்து, "அதைப் பற்றி நீ ஏன் முன்பே என்னிடம் சொல்லவில்லை ?" என்று கோபித்துக்கொண்டார். அது முதல் முத்து பள்ளியிலோ, வீட்டிலோ, வேறு இடத்திலோ, தனக்கு நேரும் விஷயங்களை அவ்வப்போது தன் தாய் தந்தையரிடம் சொல்லிவிடுவான். அவன் ஒன்றையும் ஒளிக்க மாட்டான்.

| | | |
|---|---|---|
| தரை | அனுப்பி | அழைத்து |
| தவறி | விஷயம் | விம்மி விம்மி |
| நேரும் | கோபித்து | விசாரித்து |
| உண்மை | ஒளிக்க | மெதுவாக |

## பயிற்சி :

விடை சொல் :—

1. உபாத்தியாயர் ஏன் முத்துவை வேறு பலகை வாங்கிச் சோமுவுக்குக் கொடுக்கச் சொன்னார்?
2. சோமுவின் அண்ணன் ஏன் முத்துவின் தகப்பனாரிடம் வந்தான்?
3. தகப்பனார் என்ன செய்தார்?
4. அவர் ஏன் முத்துவைக் கோபித்துக் கொண்டார்?



## 21. தென்னந்தோப்புத் திருடன்

1. திருவையாறு என்னும் ஊரில் தென்னை நன்கு வளரும். அந்த ஊரில் தியாகராஜர் என்ற ஒரு மிராசுதார் வசித்து வந்தார். அவருக்கு ஒரு தென்னந் தோப்பு உண்டு. அதில் தேங்காய்கள் திருடு போகாத படி அவர் தினந்தோறும் காலை மாலை வேளைகளில் தம் தோப்பைச் சுற்றி வருவார்.

2. ஒரு நாள் சில மரங்களில் காய்கள் குறைந்திருப்பதைக் கண்டு அவர் திகைத்தார். யாரோ ஒருவன் காய்களைத் திருடியிருக்கிறான் எனத் தீர்மானித்தார்; திருடனைக் கண்டுபிடிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்.

146505

**3.** அந்த ஊரில் முனியன் என்ற ஒரு திருடன் இருந்தான். தியாகராஜருக்கு அவன் மீது சந்தேகம் உண்டாயிற்று. ஒரு நாள் சாயங்காலம் முனியன் ஒரு மரத்திலி ருப்பதை அவர் கண்டார். அவன் இறங்கியதும் அவனை அவர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்.

4. **தியாகராஜர்:**-"அடே திருடா! இன்று நீ அகப்பட்டுக் கொண்டாய். நீ ஏன் என் தோப்புக்குள் வந்தாய்? ஏன் இந்த மரத்தின் மீது ஏறினாய்?"

5. **முனியன்:**—"ஐயா! மாட்டுக்குப் புல் பிடுங்குவதற்காக இதன்மீது ஏறினேன்."

6. **தியாகராஜர்;**—"தென்னை மரத்தின் நுனியில் புல் ஏதடா?"

7. **முனியன்:**—"உச்சியில் பார்த்தேன்; புல் அகப்படவில்லை. அதனால் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே நான் இறங்கி விட்டேன். புல் இல்லாதபோது எனக்கு அங்கென்ன வேலை?"

**தியாகராஜர்:**—"பல நாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான். நீ இங்கு இனி வந்தால் உன் காலை முறித்துவிடுவேன். ஓடிப் போ. இந்தத் தடவை உன்னை மன்னித்தேன்" என்று கூறி, கன்னத்தில் இரண்டு அறைகள்

கொடுத்து, அவனை விரட்டி விட்டார். அது முதல் அவன் எங்கும் திருடுவதில்லை.

| | | |
|---|---|---|
| மிராசுதார் | கன்னம் | ஏறினய் |
| தீர்மானம் | மன்னித்து | முறித்து |
| இறங்குதல் | சந்தேகம் | விரட்டி |
| நன்கு | ஏற்பாடு | திருடன் |
| திருடு | வளரும் | கண்டுபிடிக்க |
| உச்சி | குறைந்து | கெட்டியாக |
| தோப்பு | நுனி | அகப்பட்டு |

## பயிற்சி :

I. விடை சொல் :—

1. தியாகராஜர் ஏன் தினமும் தமது தோப்பைச் சுற்றி வருவார் ?
2. மரங்களில் ஏன் காய்கள் குறைந்திருந்தன?
3. முனியன் தென்னை மரத்தில் எதற்காக ஏறினதாகச் சொன்ஞன் ?
4. அவன் மரத்திலிருந்து இறங்கினதற்கு என்ன காரணம் சொன்ஞன் ?
5. தியாகராஜர் முனியனை என்ன சொல்லித் தண்டித்தார் ?

II. மேலேயுள்ள சொற்களை அகராதி வரிசையில் எழுது.



## 22. புதிய கத்தி

1. ஒரு நாள் எங்கள் தகப்பனார் சென்னைக்குப் போய்வந்தார். எங்கள் ஒவ்வொருவருக்கும் அவர் ஒவ்வொரு சாமான் வாங்கி வந்தார்; என் தங்கைக்கு ஒரு பொம்மை; என் தம்பிக்கு ஒரு ஊதல்; எனக்கு ஒரு பந்து; என் அண்ணன் சங்கருக்கு ஒரு பேனாக் கத்தி. நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்குக் கிடைத்த அன்பளிப்பைக் கொண்டு விளையாடிக்கொண்டு வந்தோம்.

2. மறுநாள் காலை, என் அண்ணன் தனக்குக் கிடைத்த கத்தியைக்கொண்டு தோட்டத்தினுள் சென்று அங்கிருந்த செடிகளின் கிளை

களை வெட்டிக்கொண்டிருந்தான். அதைக் கண்ட எங்கள் தாயார் வருத்த முற்று, அவனைக் கோபித்து, "உன் தகப்பனார் உன் செயலைக் கண்டால் என்ன சொல்வார்? இவ்வாறு செய்யலாமா?" என்று கேட்டாள். அவன் உடனே ஓடிப்போய்விட்டான்.

3. அன்று மாலை எங்கள் தகப்பனார், வேலையிலிருந்து வந்ததும் தோட்டத்தினுள் சென்றார். அங்குச் செடிகள் வெட்டப்பட்டிருந்ததைக் கண்டு வருத்த மடைந்து, உள்ளே வந்து எங்கள் தாயாரைப் பார்த்து, "தோட்டத்தில் செடிகள் எல்லாம் வெட்டப்பட்டிருக்கின்றனவே; இது யார் செய்த வேலை?" என்று கேட்டார். தாயார் பதில் சொல்லவில்லை.

4. உடனே என் அண்ணன் தகப்பனாரிடம் சென்று வணங்கி, "அப்பா! நானே அச்செடிகளை வெட்டினேன்; தாங்கள் எனக்குத் தந்த கத்தி கூர்மையாக இருக்கிறதா வென்று பார்த்தேன்; அறியாமல் செடிகளையெல்லாம் வெட்டி விட்டேன்; அம்மா சொன்ன பிறகு தான் என் குற்றத்தை உணர்ந்தேன். அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்; இனி அவ்விதம் செய்யமாட்டேன். என் குற்றத்தை மன்னியுங்கள்" என்றான்.

5. தகப்பனார் அதைக் கேட்டு, சற்று ஆலோசித்து, தமது வருத்தத்தையும் கோபத்

தையும் அடக்கிக்கொண்டு, "அடே, சங்கர்! நீ செய்த காரியத்திற்காக உன்மேல்எனக்குக் கோபந்தான். செடிகள் வெட்டப்பட்டுச் சீர்குலைந்து இருப்பதைப் பார்க்க எனக்கு வருத்தம் உண்டாகிறது. ஆயினும் நீ தைரியமாக என்முன் வந்து, உன் தவறை ஒப்புக்கொண்டு உண்மை பேசியதற்காக உன்னை மெச்சுகிறேன்; உன்னை மன்னித்தேன்" என்று சொல்லித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| உடனே | மெச்சுகிறேன் | அன்பளிப்பு |
| உள்ளே | சென்னை | வெட்டப்பட்டு |
| பதில் | கிடைத்த | அறியாமல் |
| கூர்மை | இவ்வாறு | ஆலோசித்து |
| பிறகு | வெட்டப்பட்டு | அடக்கிக்கொண்டு |
| ஆயினும் | தைரியமாக | சீர்குலைந்து |

## பயிற்சி :

I. விடை சொல் :—

1. சங்கர் முதலிய ஒவ்வொருவருக்கும் கிடைத்த அன்பளிப்புகள் யாவை?
2. தாயார் முத்துவை ஏன் கடிந்து பேசினாள்?
3. அண்ணன் தனக்குக் கிடைத்த கத்தியைக் கொண்டு என்ன செய்தான்?
4. தகப்பனார் அண்ணனை ஏன் கோபிக்கவில்லை?

II. தங்களுக்குக் கிடைத்த அன்பளிப்புப் பொருள்களைக் குழந்தைகள் ஒவ்வொருவரும் எவ்வாறு உபயோகித்தனர் என்று எழுது.



## 23. மர நாய்

கந்தன் வீட்டில் நாயொன்று
காவல் காக்க மிக நன்று ;
வாயைத் திறந்து குலைக்காது
வாலை யாட்டி நடக்காது.

திறந்த கண்கள் மூடாமல்
திருடர் வீட்டில் நாடாமல்
காவல் புரியும் எப்போதும்
கண்டால் யார்க்கும் பயமாகும்.

இழுத்தா லன்றிப் போகாது
எந்த நாளும் சாகாது ;
என்றும் அதனால் பயமேயாம்
என்றாலும் அது மரநாயாம்.



# 24. ஔவையார்

1. இதோ காணப்படுவது ஔவையாரின் படம். நம் தமிழ் நாட்டுப் புலவர் பலருள் ஔவையாரும் ஒருவர். அவர் தெய்வ பக்தியும் சிறந்த அறிவும் உள்ளவர்; ஏழைகள் பணக்காரர் என்ற வித்தியாசம் அவரிடம் கிடையாது; ஏழைகள் கொடுக்கும் கூழைக் குடித்து அவர்கள் மீது கவி பாடுவார்.

2. ஒரு சமயம் ஔவையார் வெகுதூரம் நடந்த களைப்பினால் ஒரு சிறிய ஊரை அடைந்தார். அங்கே ஒரு திண்ணையின்மீது ஒரு மாது உட்கார்ந்து கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தாள். ஔவையார் அவளை

யணுகி, "பெண்ணே! நீ ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

3. அதற்கு அவள், "நான் என் புருஷனுக்கு மூத்த மனைவி; இளையவள் ஒருத்தியிருக்கிறாள். அவள் மீதுதான் அவருக்குப் பிரியம் அதிகம். அது காரணமாக அவள் என் மீது தகாத பல பழிகள் சுமத்தி என்னைத் தண்டனைக்கு உட்படுத்துகிறாள். இன்று அவர் வெளியூருக்குப் போயிருக்கிறார். அதனால் வீட்டுத் தோட்டத்தி லிருந்த ஒரு பலா மரத்தை அவள் வெட்டி வீழ்த்தினாள். கணவர் வந்ததும், நான் வெட்டி வீழ்த்தியதாக என்மீது பழி சுமத்தப் போகிறாள். அவர் வந்ததும் என்னை நையப் புடைப்பார். நான் என் செய்வேன்? தாங்கள் நல்ல சமயத்தில் வந்தீர்கள். இச்சங்கடமான நிலையிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டுகிறேன்" என்றாள்.

4. அதைக் கேட்ட ஔவையார் "நீ அதற்குப் பயப்படாதே. தெய்வம் நமக்குத் துணை செய்யும்" என்று சொல்லிக்கொண்டே அத் தோட்டத்தினுள் சென்று பலாமரத்தைப் பார்த்து,

"கூரிய வாளால் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றாய் உயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோல் கொட்டையாய் வண்காயாய்த் [தின்பழமாய்ப்
பண்டு போல் நிற்கப் பணி"

என்று பாடினார்.

5. உடனே பலாமரமும் அவ்வாறே மரமாகித் தழைத்துக் காய்த்துப் பழத்துடன் விளங்கிற்று. அதைக் கண்ட மூத்தவள் மனமகிழ்ந்து ஔவையாரை வாயார வாழ்த்தி வணங்கித் தன் வீட்டினுள் அழைத்துச் சென்று அமுது படைத்து உண்பித்து வழியனுப்பினாள்.

| | | |
|---|---|---|
| புலவர் | பணக்காரர் | பிரியம் |
| பக்தி | வாழ்த்தி | வீழ்த்தி |
| கூழ் | கவி பாடு | கணவன் |
| மாது | களைப்பு | புருஷன் |
| இளையவள் | சுமத்தி | சங்கடம் |
| மூத்தவள் | தண்டனை | காப்பாற்ற |
| பணி | இதழ் | சீரிய |
| உண்பித்து | பண்டு | அமுது |
| | | நையப்புடைத்தல் |

## பயிற்சி :

I. விடை சொல் :—

1. ஔவையார் ஏன் ஒரு சிறு ஊரை அடைந்தார் ?
2. அவள் கண்ட மாது ஏன் அழுதுகொண்டிருந்தாள் ?
3. ஔவையார் அவளை எப்படித் தேற்றினாள் ?

II. ஔவையார் சொன்ன பாட்டை மனப்பாடம் செய்து கொள்.



# 25. தீபாவளி

1. சென்ற திங்கட்கிழமை நாங்கள் தீபாவளிப் பண்டிகை கொண்டாடினேம். அது ஒரு பெரிய பண்டிகை. தீபாவளி எப்பொழுது வரும் என்று நாங்கள் அனேக நாட்களாக எதிர்பார்த்திருந்தோம். தீபாவளி யன்று நாங்கள் எல்லோரும் புதிய ஆடைகள் அணிந்தோம். தின்பண்டங்கள் ஏராளமாகக் கிடைத்தன. பட்டாசு முதலியனவும் வெடித்தோம்.

2. அன்று விடியுமுன் எழுந்திருந்து எல்லாரும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு மங்கள ஸ்நானம் செய்து புத்தாடை யுடுத்திச் சிற்றுண்டி அருந்தினேம். பெரியவர்களை வணங்கினேம். பகலில் வடை, பாயசம், போளியுடன் நல்ல உணவு உண்டோம்.

3. தீபாவளி ஏன் கொண்டாடப்படு கிறது என்பதுபற்றி எங்கள் தாத்தா ஒரு கதை சொன்னார். அதாவது :

4. வெகு காலத்திற்குமுன் நம் நாட்டில் நரகாசுரன் என்ற ஓர் அசுரன் இருந்தான். அவன் ஜனங்களை மிகவும் துன்பப்படுத்தியும் கொன்று தின்றும் வந்தான். அவன் செய்த துன்பங்களைத் தாங்க முடியாமல் ஜனங்கள் கடவுளிடம் முறையிட்டுக்கொண்டனர். அதனால், கடவுள் கிருஷ்ணனாகப் பிறந்து, ஜனங் களுக்குத் துன்பம் விளைத்துவந்த நரகாசுரனைக் கொன்றார். மற்றும் அவனைச் சேர்ந்த அசுரர் களை யெல்லாம் கொன்று தீர்த்தார். ஜனங் களும் துன்பம் நீங்கி இன்பமுற்று வாழ்ந்து வந்தனர்.

5. நரகாசுரன் இறந்த தினத்தையே நாம் தீபாவளியாகக் கொண்டாடுகிறோம். அது வருடந்தோறும் ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முன் தினம் வரும். அமா வாசை யன்று சிலர் நோன்பு நோற்பது வழக் கம். அதற்குக் 'கேதாரி கௌரி விரதம்' என்று பெயர். அன்று விரத மிருந்து, அதிரசம் செய்து அம்மனுக்குப் படைத்து, கேதாரியின் கதையைக் கேட்ட பின்னரே, போசனம் அருந்துவார்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஏராளமாக | அருந்தி | நோன்பு | முறையிட்டு |
| அசுரன் | துன்பம் | போசனம் | இன்பமுற்று |
| விளைத்து | புத்தாடை | வாழ்ந்து | மற்றும் |
| எதிர்பார்த்து | ஸ்நானம் | தாங்க | கேதார கௌரி |

## பயிற்சி :

I. விடை சொல் :—

1. சிறுவர்கள் ஏன் தீபாவளியை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர் ?
2. தீபாவளி வருஷம் தோறும் எந்த மாதத்தில் எந்தத் தினத்தில் வரும் ?
3. தீபாவளி கொண்டாடுவதைப் பற்றி உன் தாத்தா சொன்ன கதையை எழுது.

II. உனக்குத் தெரிந்த பத்துத் தின்பண்டங்களின் பெயர்களைப் பின் வருமாறு கட்டம் வரைந்து கொண்டு எழுது.

| எண்கள் | இனிப்புத் தின்பண்டங்கள் | உப்புத் தின்பண்டங்கள் |
|---|---|---|
| | | |



## 26. பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு ;—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி.

அம்மா என்குது
வெள்ளைப்பசு ;—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி.

நாவால் நக்குது
வெள்ளைப்பசு ;—பாலை
நன்ருய்க் குடிக்குது
கன்றுக்குட்டி.

முத்தம் கொடுக்குது
வெள்ளைப்பசு ;—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக்குட்டி.

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

# 27. பள்ளி வேலை

ஒரு நாள் காலை எங்கள் மாமன் சென்னையிலிருந்து எங்கள் ஊருக்கு வந்தார். அவரைக் கண்டதும் எங்களுக்கு வெகு சந்தோஷம் ஏற்பட்டது. அவரை வரவேற்று, நானும் என் அண்ணனும் வணங்கினோம். அவர் நீராடவும், இறை வழிபாடு செய்யவும், காலை உணவு அருந்தவும் என் அண்ணன் வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். பிறகு அவர் எங்களுடன் கொஞ்ச நேரம் பின்வருமாறு பேசினார்.

**மாமன்:** என்ன கமலா? நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

**கமலா:** நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.

**மாமன்:** தினமும் பள்ளியில் நீ என்ன வேலை செய்கிறாய்?

**கமலா:** நாங்கள் பள்ளிக்குச் சென்றதும், எல்லா வகுப்பினரும் கூடி இறைவனைத் துதிப்போம். அப்போது எங்கள் ஆசிரியர்களும் அங்கு வந்து கூடுவர். அவர்களுள் ஒருவர் அன்றைச் செய்தித் தாள்களிலிருந்து முக்கியமான சில செய்திகளை எடுத் துரைப்பார். அது முடிந்ததும் பிள்ளைகள் யாவரும் தங்கள் தங்கள்

ஆசிரியர்களுடன் ஒருவர்பின் ஒருவராக வகுப்புக்களுக்குச் செல்வர்.

**மாமன் :** வகுப்பில் என்னென்ன பாடங்கள் தினமும் நடைபெறும்?

**கமலா :** பாடம் படித்தல், பார்த்து எழுது தல், உரையாடல், கணக்குச் செய்தல் முதலியன தினமும் நடைபெறும்.

**மாமன் :** மற்றைப் பாடங்கள் எவ்வெப் போது நடத்தப்படும்?

**கமலா :** திங்கள், புதன், வெள்ளிக்கிழமை களில், குழந்தைப் பாடல்கள் அபிநயப் பாடல்கள் நடத்தப்படுகின்றன. செவ் வாய், வியாழன்களில் செய்யுள் ஒப்பித் தல் நடக்கும்.

**மாமன் :** (சங்கரை நோக்கி) உங்கள் பள் ளியில் கைத்தொழில் கற்பிக்கப் படுவ தில்லையோ?

**சங்கர் :** உண்டு மாமா! கைத்தொழில் சில நாட்களிலும், தோட்டவேலை சில நாட் களிலும் கற்பிக்கப்படுகின்றன.

**மாமன் :** விளையாட்டு? தேகாப்பியாசம்?

**சங்கர் :** உண்டு. தினந்தோறும் மாலையில் கடைசி நேரத்தில் பாதி நேரம் தேகாப் பியாசமும், பாதி நேரம் விளையாட்டும் நடைபெறுகின்றன.

**மாமன் :** சனி ஞாயிறுகளில் என்னென்ன பாடங்கள் நடைபெறுகின்றன ?

**கமலா :** சனி ஞாயிறுகளில் எங்களுக்குப் பள்ளிக்கூடமில்லை. அவை விடுமுறை நாட்கள்.

**சங்கர் :** சில சனிக்கிழமைகளில் நாங்கள் உல்லாசப் பிரயாணம் போய்விடுவோம்.

**மாமன் :** உபாத்தியாயர்களும் கூட வருவார்களா ?

**சங்கர் :** ஆம். உபாத்தியாயர்கள்தான் தங்கள் தங்கள் வகுப்புப் பிள்ளைகளை அழைத்துச் செல்வார்கள்.

**மாமன் :** நீ அவ்வாறு எவ்விடத்திற்குப் போயிருக்கிறாய் ?

**சங்கர் :** இவ்வூருக் கருகில் பெரிய ஆறு ஒன்று உண்டல்லவா ? அந்த ஆற்றைக் கடக்க இப்போது ஒரு பாலம் கட்டுகிறார்கள். அதை நானும் என் வகுப்புப் பிள்ளைகளும் சென்ற சனிக்கிழமையன்று போய்ப் பார்த்து வந்தோம். அது ஒரு பெரிய பாலம். அது வெகு அழகாக இருக்கிறது. அதன் நீளம் ஒரு மைல். அந்தப் பாலத்தின்மேல் மோட்டார் முதலிய வண்டிகள் வேகமாகப் போகும்படி அழகிய கற்சாலை அமைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் எங்கள் தகப்பனார் அங்கு வந்து மாமனை விசாரித்துப் பேச ஆரம்பித்தார். பின்னர் நாங்கள் எங்கள் பாடங்களைப் படிக்கச் சென்றோம்.

| | | |
|---|---|---|
| கண்டதும் | துதி | விடுமுறை |
| சந்தோஷம் | செய்தித்தாள் | உல்லாசம் |
| இறை வழிபாடு | முக்கியமான | பிரயாணம் |
| ஏற்பாடு | உரைப்பார் | அவ்வாறு |
| பின்வருமாறு | ஒப்பித்தல் | கடக்க |
| வேகமாக | கற்சாலை | அமைத்து |
| பின்னர் | அழகாக | விசாரித்து |

பயிற்சி :

I. உன் வகுப்பில் உள்ள சிறுவர்களின் பெயர்களை எழுது.

II. அப்பெயர்களை அகராதி வரிசைப் படுத்தி மறுபடியும் எழுது.

III. வாரத்தின் நாட்களை வரிசையாக எழுதி ஒவ்வொரு நாளும் நீ வீட்டில்—பள்ளியில் செய்யும் வேலைகளைப் பின் காணப்படுவதுபோல் கட்டம் வகுத்துக்கொண்டு எழுது.

| எண்கள் | கிழமைகள் | வீட்டில் செய்யும் வேலைகள் | பள்ளியில் செய்யும் வேலைகள் |
|---|---|---|---|
| | | | |



# 28. எலிகள் மகாநாடு

1. ஒரு நாள் ஒரு வீட்டிலிருந்த எலிகளெல்லாம் தனிமையில் ஒரு கூட்டம் கூடி ஒரு பெரிய எலியைத் தலைமையாகத் தேர்ந்தெடுத்தன.

2. தலைவர்:— "நண்பர்களே! என்னை ஏக மனதாகத் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததற்கு உங்கள் எல்லாருக்கும் எனது நன்றி உரியதாகும். இப்பொழுது நமக்கு நெருக்கடியான காலமாக இருக்கிறது. நம்முடைய பெரும் விரோதியான பூனை இவ்வீட்டில் இருக்கும் வரை நாம் சுகமாக வாழ முடியாது. இந்தப் பூனையை நாம் ஒழித்தே தீரவேண்டும். இது மிக்க அநியாயம் செய்கிறது. நம் குட்டிகளை யெல்லாம் விழுங்கி விடுகிறது. என்ன அக்கிரமம்! இதை ஒழித்தாக வேண்டும்; என்ன சொல்லுகிறீர்கள்?" (எல்லா எலிகளும் இதை ஆமோதித்துக் கோஷம் செய்தன.)

3. **தாய் எலிகளில் ஒன்று** :-“நண்பர்களே! தலைவர் சொன்னதே சரி. இப்பூனை இருக்கும் வரையில் நமக்குத் தொல்லைதான். வளையிலிருந்து வெளியே வரப் பயமாக இருக்கிறது. பானையில் இருக்கும் எண்ணெயைக் குடிக்க முடியவில்லை. பாத்திரங்களிலிருக்கும் பலகாரத்தைத் தின்ன முடியவில்லை. ஆகவே தலைவர் கூறியபடி இப்பூனையை ஒழிக்க வேண்டும்.”

4. **மற்றொரு எலி** :—“அதற்கு நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன். நான், ஒரு நல்ல மணி வைத்திருக்கிறேன். சமூக நலனை உத்தேசித்து நான் உங்களிடம் அதை இனாமாகக் கொடுத்து விடுகிறேன். பூனையின் கழுத்தில் அதைக் கட்டிவிடுங்கள். பூனை வந்தால் மணிச் சத்தம் கேட்கும். நாம் உடனே ஓடி ஒளிந்துகொள்ளலாம்! என் யுக்தி எப்படியிருக்கிறது?”

6. எல்லா எலிகளும் இதைக் கேட்டதும் கோஷம் செய்து,“இதுவே சரியான யோசனை!” என்று சொல்லி, மணியைப் பொது நன்மைக்காக இனாமாக அளிக்கும் எலியை மிகவும் கொண்டாடிப் பேசின.

7. இச்சமயத்தில் ஒரு கிழ எலி எழுந்து “நண்பர்களே! யோசனை மிகவும் மெச்சத்தக்கதுதான். ஆனால் எனக்கு ஒரு சிறிய சந்தேகம். அந்தப் பூனையின் கழுத்தில், யார்? எப்படி? எப்பொழுது? அந்த மணியைக்

கட்டுவது சொல்லுங்கள்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே, அந்தப் பூனையும் அங்கே வந்தது.

8. எலிகள் எல்லாம் நடுநடுங்கி மூலைக்கு ஒன்றாய் ஓடி உயிர் தப்பின. மகாநாடும் கலைந்தது.

| | | |
|---|---|---|
| மகாநாடு | மெச்ச | உரியது |
| நன்றி | இனமாக | நெருக்கடி |
| ஒழித்து | சரியான | அக்கிரமம் |
| ஆமோதித்து | பொதுநலன் | தொல்லைகள் |
| சுகமாக | யோசனை | சமூக நலன் |
| அநியாயம் | நன்மை | ஏகமனதாக |
| கோஷம் | ஓட்டம் | தனிமை |
| பலகாரம் | பாத்திரம் | தேர்ந்து |
| கலைந்து | உபாயம் | விரோதி |

## பயிற்சி

I. விடை சொல் :—

1. எலிகள் ஏன் மகாநாடு கூடின ?
2. தாய் எலியின் கஷ்டம் யாது ?
3. பூனையை ஒழிக்க மற்றொரு எலி கூறிய யுக்தி யாது ?

II. இந்தப் பாடத்துக் கதையை நடித்துக் காட்டு.

III. மேலே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகராதி வரிசைப் படுத்தி எழுது.



## 29. போகுது பார்

போகுது பார் ரெயில் போகுது பார்
புகையினைக் கக்கியே போகுது பார்.

'குபுகுபு' சத்தம் போடுது பார்
"கூக்கூக்" என்றுமே கூவுது பார்.

தூரமும் நேரமும் குறைவது பார்
துரிதமாய் எங்குமே ஓடுது பார்.

அறையறை யான வண்டிகள் பார்
அவற்றிலே மனிதர் செல்வது பார்.

'ஸ்டேஷனி' லெல்லாம் நிற்குது பார்
சிவப்புக் கொடிக்கே அஞ்சுது பார்.

மலையைக் குடைந்தே செல்லுது பார்.
மையிருள் தன்னிலும் ஓடுது பார்.

பட்டண மாமா கடித மெலாம்
பையிலே தூக்கி வருகுது பார்!

—அழ. வள்ளியப்பா




# 30. கந்தன்

1. கந்தன் என்ற ஏழை மனிதன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு சிறு குடிசையில் வசித்து வந்தான்; தினமும் செருப்புத் தைத்துச் சீவனம் நடத்தி வந்தான். ஒரு நாளைக்கு ஒரு ஜதை செருப்பு மட்டுமே அவனால் தைக்க முடிந்தது. தைத்த செருப்புக்களை அவன் தினமும் கடைத் தெருவில் கொண்டு விற்று வருவான். அந்த ஊதியத்தைக் கொண்டே அவனும் அவனது மனைவியும் சீவித்து வந்தனர். வருவாய் போதாவிட்டாலும், அவர்கள் கிடைத்ததைக் கொண்டு திருப்தி யடைந்து வந்தார்கள்.

2. ஒரு நாள் கந்தன் தன் கைவசம் இருந்த தோலைச் செருப்புக்காக அறுத்து வைத்திருந்தான். அவன் உடல் நல மில்லாமல் இருந்து வந்தமையால், அவனால் உட்கார்ந்து அதைத் தைக்க முடியவில்லை. அன்று முழுவதும் அவன் ஊணுறக்க மில்லாமல் இருந்தான். மறுநாள் பொழுது விடிந்தவுடன் அவன் மெல்ல எழுந்து தோல் வைக்கப்படிருந்த பெட்டியினிடம் போனான். அங்கே தோலுக்குப் பதிலாக நேர்த்தியான ஒரு ஜதை செருப்பு இருப்பதைக் கண்டான்; அதைக் கண்டு ஆனந்தம் அடைந்தான். உடனே அதைக் கொண்டுபோய்க் கடையில் விற்று இன்னொரு ஜதை செருப்புக்குத் தோலும் வீட்டுக்கு உணவுப் பொருள்களும் வாங்கி வந்தான். அன்றும் அவன் உடல் நலமின்றிச் சோர்ந்திருந்தமையால்,செருப்புத் தைப்பதற்கு உரிய படி அத்தோலை அறுத்து வைத்து விட்டு இரவில் படுக்கச் சென்றான்.

3. மறுநாள்காலை கந்தன் பார்த்தபொழுது, செருப்புக்கள் அன்றும் தைத்து வைக்கப் பட்டிருந்தன. கண்டான் கந்தன்; ஆச்சரியம் கொண்டான். அவற்றைக் கொண்டுபோய்க் கடைத் தெருவில் விற்றான். தினமும் கிடைப்பதைக் காட்டிலும் அன்று அதிக பணம் கிடைத்தது. அன்றும் இரண்டு ஜதை செருப்புகளுக்குத் தோல் வாங்கி வந்து, அவற்றை

அறுத்துவைத்தான். மறுநாள் இரண்டு ஜதை களும் தைத்து வைக்கப்பட்டிருந்தன. அன்று, அவற்றை விற்று நான்கு ஜதைகளுக்குத் தோல் வாங்கிவந்து அறுத்து வைத்தான். மறுநாளும் நான்கு ஜதை செருப்புகள் தைத்து வைக்கப்பட்டிருந்தன. இம்மாதிரியாக நாளுக்கு நாள் அவனது வருவாய் மிகுந்து வந்தது. அதனுல் அவனுடைய குடும்ப வாழ்க்கையும் உயர் வடைந்தது.

4. ஒரு நாள், இவ்வாறு தங்களுக்கு உதவி செய்பவர் யார் என்று காணவேண்டும் என்று கந்தனுக்கு ஓர் எண்ணமும் ஆர்வமும் உண்டாயின. அன்றிரவு தூங்காமல் கந்தன் இதன் காரணத்தையறியக் கவனித்துக்கொண் டிருந்தான். நடு இரவில் இரு வனதேவதை கள் உள்ளே வந்து உட்கார்ந்து, செருப்பு களைத் தைத்துவிட்டுச் சென்றன. அவைகள் வெகு கந்தையான ஆடைகள் அணிந்திருப்ப தைக் கண்ட கந்தன் மிக வருத்தமடைந்தான். மறுநாள் கடைக்குச் சென்றபோது கந்தன் இரண்டு நல்ல புதிய பட்டாடைகளை வாங்கி வந்து, தோல் வைக்கும் பெட்டியில் வைத் தான். அன்றிரவு அவ்வன தேவதைகள் வந்து பார்த்தபொழுது அப்பட்டாடைகள் மட்டுமே இருந்ததைக் கண்டு, அவைகள் அவற்றை எடுத்துக்கொண்டு போய்விட்டன. அதன்பின் அவைகள் அங்கு வருவ தில்லை. செல்வவானுன

கந்தனுக்கு அவைகளின் உதவி இனி அவசிய மில்லையல்லவா? கந்தனும் தனக்குக் கிடைத்த பொருளைக் கொண்டு நல்வாழ்க்கை நடத்தி வந்தான்.

| | | |
|---|---|---|
| குடிசை | ஊதியம் | அறுத்து |
| ஜதை | வருவாய் | உடல் நலம் |
| கந்தை | சீவனம் | ஊண் உறக்கம் |
| பட்டாடை | கைவசம் | வாழ்க்கை |
| உதவி | பதிலாக | ஆர்வம் |
| சோர்ந்து | உயர்வு | செல்வவான் |

## பயிற்சி :

கீழ்க் கண்ட கேள்விகளுக்கு விடைகளை எழுது.

1. கந்தன் எப்படிச் சீவனம் நடத்தி வந்தான்?
2. ஒரு நாள் ஏன் கந்தன் அவனது வேலையைச் செய்யவில்லை?
3. கந்தனுக்கு நாளுக்கு நாள் அதிக பணம் எவ்வாறு கிடைத்தது?
4. இவ்வாறு கந்தனுக்குத் தன் வேலையில் உதவி செய்தவை எவை?
5. கந்தன் அவைகளுக்கு எப்படித் தன் நன்றியைக் காட்டினான்?

# செய்யுள் பாடம்

## 1. உலக நீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம். 1
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்.
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்.
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம். 2
மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்.
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம். 3
சினந்திருந்தார் வாசல் வழிச் சேறல் வேண்டாம்.
குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்.
கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டாம்.
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம். 4
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்.
கோயில் இல்லா ஊரில் குடி யிருக்க வேண்டாம்.
வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத்திரியவேண்டாம்.
மதியாதார் தலை வாசல் மிதிக்க வேண்டாம். 5

போகாத இடம்தனிலே போக வேண்டாம்.
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம். 6
மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்.
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்.
கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம். 7
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்.
சேராத இடந்தனிலே சேர வேண்டாம்.
செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.
ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம். 8
உற்றாரை உதாசினங்கள் செய்ய வேண்டாம்.
காணாத வார்த்தைகளைக் கட்டுரைக்க வேண்டாம்.
புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.
திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம். 9
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்க வேண்டாம்.
வெற்றியுள்ள பெரியாரை வெறுக்க வேண்டாம்.
தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம். 10

## 2. கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.
கிட்டா தாயின் வெட்டென மற.
கீழோர் ஆயினும் தாழ உரை.
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்.
கெடுவது செய்யின் விடுவது கருமம்.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு.
சீரைத் தேடின் ஏரைத் தேடு.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.

தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயிற் சிறந்த தொரு கோயிலும் இல்லை.
திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
தீராக் கோபம் போராய் முடியும்.
தெய்வம் சீறின் கைதவம் மாளும்.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
தையும் மாசியும் வையகத்து உறங்கு
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
தோழ னோடும் ஏழைமை பேசேல்.
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்.
நாடெங்கும் வாழக் கேடு ஒன்று மில்லை.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூல் முறை தெரிந்து சீலத் தொழுகு.
நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை.
பாலோ டாயினும் காலம் அறிந்து உண்.
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
மாரி அல்லது காரியம் இல்லை.
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
மேழிச் செல்வம் கோழை படாது.

146515

368

201.64/L